**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# Is there a God?

## Acts 17:22-24

**அப்போஸ்தலர் 17:22-24, அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று: அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதாபக்தியுள்ளவர்களென்று (மூடநம்பிக்கையுள்ளவர்களென்று) காண்கிறேன். 23. எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். 24. உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை.**

*பவுல் தனது இரண்டாவது மிஷனெரி பிரயாணத்தில். கர்த்தர் செய்ய நினைத்ததற்கு சத்துருவானவன் எதிர்த்து நின்றதால் பவுல் எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டார். அவர் கிரேக்க நாட்டில் பிலிப்பி, தெசெலோனிக்கா மற்றும் பெரெயா பட்டணங்களில் சபைகளை நிறுவினார். அவர் எல்லோராலும் துரத்தப்பட்டார். அவர் லூக்கா, சீலா மற்றும் தீமேத்தேயுவையும் அந்த பட்டணங்களில் உள்ள சபைகளை கவனிப்பதற்காக அங்கே விட்டுவிட்டு தனியாக அத்தேனா பட்டணத்தில் நிற்பதை நாம் 16வது வசனத்தில் பார்க்கிறோம்.*

*பவுல் அங்கே சீலாவும், தீமோத்தேயுவும் தன்னோடு இணைவதற்காக காத்திருக்கிறான்.அவன் தனித்து இருக்கிறான். இந்த சூழ்நிலையில் தேவன் பவுலைக் கொண்டு ஒரு முக்கியமான போதனையை மாாஸ் மேடையில் செய்ய உபயோகப்படுத்தினார்.*

*கிறிஸ்தவம் என்பது தேவனை அறிந்து கொள்ளும் விதமாக போதிக்க வேண்டும் என்பதிலிருந்து வழி விலகி விட்டது. இயேசு தேவனை நமக்கு வெளிப்படுத்துவதற்காக நம்மிடத்திற்கு வந்தார். இன்றைய காலகட்ட சபையின் முக்கியமான தேவை தேவனை குறித்து சரியாக வெளிகாட்ட வேண்டியது.*

***தேவனை எப்படி அறிவது?***

*தேவனுடைய ஞானம் எல்லா இடங்களிலும் நிரம்பி இருக்கிறது.*

***நீங்கள் எதற்காக படைக்கப்பட்டீர்கள்?***
*நீங்கள் தேவனை பற்றி அறிந்து கொள்வதற்காகவே படைக்கப்பட்டீர்கள்.*

*தேவன் படைத்த சிருஷ்டிகள் அவரை ஏற்றுக்கொள்ள விரும்புகிறார். அவரைப் பற்றி அறியவும் அவருக்கு மகிமையை செலுத்தவும் நம்மை உண்டாக்கினார்.*

*நாம் தேவனை அறியவில்லை என்றால் நாம் நம்மை படைத்த நோக்கத்திற்கு விரோதமாய் இருக்கிறோம். நாம் தேவனை அறியவில்லை என்றாலும் அவருக்கு கொடுக்க வேண்டிய மகிமையை கொடாவிட்டாலும் நாம் அவருடைய மகிமைக்கு கலங்கம் விளைவிக்கிறோம்.*

*உதாரணமாக ஒரு சீர்கேடான மகன் தன் தகப்பனுக்கு கலங்கம் விளைவிக்கிறான். நாம் ஒரு சீர்கேடான பிள்ளையை பார்க்கும் போது நாம் அந்த பிள்ளையயை வளர்த்த அதன் தந்தையை குறை கூறுவோம். அது அந்த தந்தைக்கு அவப்பெயர்.*

*தேவன் அவருக்கு மகிமையை செலுத்துவதற்காக மனிதனை படைத்தார். ஆனால் இந்த உலகத்தில் மனிதர்கள் பாவிகள், தேவனுக்கு எதிர்த்து நிற்பவர்களாக காண்கிறோம். கர்த்தர் அதை விரும்பவதில்லை, ஏனென்றால் இவர்களால் தேவனுடைய மகிமைக்கு கலங்கம் உண்டாகிறது.*

*தேவன் படைத்த எல்லா சிருஷ்டிகளும் அவருக்கு மகிமையை செலுத்த அவர் விரும்புகிறார். அவருக்கு மகிமை செலுத்தாதவர்களை தம்முடைய பிரசன்னத்திலிருந்து நீக்குகிறார்.*

***யார் தேவனை அறிவதற்கு அனுமதிக்கிறார்?***
*இயேசு கிறிஸ்து.*

***நித்திய ஜீவன் என்றால் என்ன?***
நித்திய ஜீவன் என்பது ஒரு கால அளவு அல்ல. அதாவது பொதுவாக நீண்ட ஆயள் காலத்தை குறிக்கிறது.

**யோவான் 17:3, ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.**

நித்திய ஜீவன் என்பது ஆயள் காலத்தை மட்டும் பிரதானமாக அல்ல நாம் எவ்வாறு தேவனை அறிந்து தேவனோடு வாழ்கிறோம் என்பதை குறிக்கிறது.

நித்திய ஜீவன் என்பது தேவனை அறிகிற அறிவு. இதை தரவே தேவன் இயேசு கிறஸ்துவை தந்தருளினார். நாம் தொடர்ந்து தேவனை அறிந்து தேவனோடு வாழ்வதே நித்திய ஜீவன்.

*மனிதர்கள் தேவனை அறிந்து கொள்ளவே அவர்களை படைத்தார். இயேசு இந்த உலகத்திற்கு வந்து மரித்ததின் நோக்கமும் பாவத்தில் தொலைந்த நமக்கு விடுதலை தருகிற தேவனை பற்றி அறியும் அறிவை தருவதற்கே.*

*ஆதாமை தேவன் படைத்தபோது, ஆதாம் தேவனை அறிந்து இருந்தான். ஆதாமும் ஏவாளும் ஆண்டவரோடு அனுதினமும் நடந்தார்கள், பகலின் குளிர்ச்சியான வேளையில் ஆண்டவர் அவர்களோடே பேசினார்.*

*ஆதாம் பாவம் செய்ததும் அவன் தேவனுடைய மகிமையிலிருந்து பிரிக்கப்பட்டான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறார்.ஆகவே அவர்மீண்டும் அவரிடத்தில் கிட்டி அவருடைய பிரசன்னத்தில் சேர்க்கிறார்.*

*தேவனை அறிந்து கொண்டேன் என்பதே கிறிஸ்தவர்களாய் இருப்பது.*

*மனிதர்கள் தங்களுக்கு தெரிந்த பிரபலமான மனிதர்களை பார்க்கவும், புகைப்படம் எடுத்துக் கொள்ளவும் ஆசைப்படுகிறார்கள்.*

- *எனக்கு அண்ட சராசரம் படைத்த ஆண்டவனை தெரியும்.*
- *அவர் என்றும் என்னை விட்டு விலகுவதில்லை.*
- *அவர் என்றும் என்னோடு இருக்கிறார்.*

- *அவரோடு நாம் இருப்பதை அவர் விரும்புகிறார்.*
- *எனக்கு ஆண்டவரை தரும்.*

***உங்களுடைய வாழ்வின் சிறந்த காரியம் என்ன? எது என்னை மிகவும் மகிழ்ச்சியடைய செய்கிறது?***
*கர்த்தரை பற்றி தெரிந்து கொள்வது.*

*கற்பனை செய்யக்கூடிய எல்லாவற்றிலும் திருப்தியடைய முயல்கிறோம். ஆனால் முழு திருப்தி ஆண்டவரை பற்றி அறிவதில் இருக்கிறது.*

**எரேமியா 9:23-24, ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; *24.* மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

*என்னுடைய ஞானத்தை குறித்து நான் மேன்மைபாராட்ட முடியாது..*
*நான் ஞானி அல்ல.*
*என்னுடைய பலத்தை குறித்து நான் மேன்மைபாராட்ட முடியாது..*
*நான் பலசாலி அல்ல.*
*நான எந்த வித உலக சம்பத்தை குறித்தும் மேன்மைபாராட்ட முடியாது.*

*நான் ஒன்றை குறித்தே மேன்மைபாராட்டுவேன் அது நான் அண்ட சராசரத்தை படைத்த ஆண்டவனை தெரிந்து கொண்டேன் என்பதில் இருக்கிறது.*

*எது ஆண்டவரை மிகவும் பிரியப்படுத்துகிறது?*

**ஓசியா 6:6** பலியை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்.

*தேவனை பற்றி அறிகிற அறிவை தேடுவதே ஒரு கிறிஸ்தவனுக்கு எல்லாமாகும்.*

*ஆவியக்குரிய வளர்ச்சியில் மூன்று நிலைகள் உண்டு.*
*சிறுபிள்ளைகள் - தகப்பனை அறிந்த ஒரு குழந்தை.*
*வாலிபர்கள் - தகப்பனை அறிந்த ஒரு வாலிபன்.*
*முதிர்வயதுள்ளவர்கள் - ஆவிக்குரிய தகப்பன் என்றால் தகப்பனை அறிந்த முதிர்ச்சி பெற்ற ஒருவன்.*

*தேவனை அறிவதற்கு தடையாக இருப்பது என்ன?*
*பாவம்*

*மனிதன் பாவம் செய்தபோது ஆண்டவரிடத்திலிருந்து, அவருடைய பிரசன்னத்திலிருந்து பிரிக்கப்பட்டான்.*

**ரோமர் 1:18-24, சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. *19.* தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். *20.***

***எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. 21. அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. 22. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, 23. அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். 24. இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.***

*இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவனை பற்றி அறியும் அறிவு அவனுக்குள் உண்டாயிருக்கிறது. தேவனே அதை வெளிப்படுத்தியிருக்கிறார்.*

*தேவன் அறியப்படத்தக்கவராய் இருக்கிறார். நாம் தேவனை அறிகிறதற்கு நமக்கு தடையாக இருப்பது பாவம். ஆதலால் தேவன் மனிதனை கைவிடுகிறார்.*

*பவுல் அத்தேனா பட்டணத்திற்கு வந்தடைகிறார். அங்கே அவர் பட்டணம் முழுவதும் விக்கிரங்கங்களினால் நிறைந்து இருப்பதை கண்டு வைராக்கியங் கொள்கிறார்.*

*அத்தேனா பட்டணத்தில் மிக பிரபலமான ''மார்ஸ்'' மேடையுள்ளது. மார்ஸ் மலையில் உள்ளதால் இதற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. இலத்தின் மொழியில் மார்ஸ், இது கிரேக்க மொழியில் ஆரேபாகஸ். அந்த நாட்களில் அத்தேனா பட்டணத்தின் உச்ச நீதி மன்றமாக இது திகழ்ந்தது.*

*இந்த மார்ஸ் மேடையில் பல தத்துவ கோட்பாடுகள் விவாதிக்கப்படும். பவுலின் போதனையும் அது போல ஒன்றாக காணப்பட்டது.*

*பவுல் ஒரே மெய்தேவனை குறித்து அவர்களுக்கு சொல்ல தொடங்கினான். அந்த இடத்தில் எத்தனை அந்நிய தெய்வங்கள் இருந்தாலும், ஒருவன் மெய் தேவனை அறியாவிட்டால் அவனுக்கு வாழ்வில் வெறுமையே.*

*இந்த மார்ஸ் மேடையில் எத்தனையோ அந்நிய தெய்வங்கள் இருந்தாலும் அதன் மத்தியில் அறியப்படாத தெய்வம் என்று இருந்தது. அது ஏன்?.*

*ஆண்டவர் மனிதனுக்குள் ஒரு வெறுமையை உண்டாக்கியுள்ளார். பணத்தினாலும், பொருளினாலும் வேறே எந்த காரியத்தினாலும் தன்னை திருப்திபடுத்த முடியாது. அவன் உண்மையான தெய்வத்தை அறிவதன் மூலமே, தேவனாலே மட்டுமே அந்த வெற்றிடத்தை நிரப்புகிறான்.*

*அத்தேனா பட்டண மக்கள் உண்மையான தேவனை அறிந்த கொள்ளவில்லை, அதினால் பவுல் அவர் யார் என்று தன்னுடைய போதனை மூலம் அறிமுகபடுத்திகிறான்.*

*முதலாவது தேவன் உண்டு என்று விசுவாசிக்க வேண்டும்.*
*இரண்டாவது யார் உண்மையான தேவன் என்று அறிய வேண்டும்.*
*மூன்றாவது தேவன் கூறுவதை கேட்க வேண்டும்.*
*தேவனை அறிவது என்பது அவர் உண்டென்று விசுவாசிப்பதும், அவர் யார் என்று புரிந்து கொள்வதும், நாம் அவருக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை புரிந்து கொள்வதுமாகும்.*

**V 22, அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று: அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதாபக்தியுள்ளவர்களென்று (மூடநம்பிக்கையுள்ளவர்களென்று) காண்கிறேன்.**

*அவர்கள் மூடநம்பிக்கையுள்ளவர்கள்.*
*அவர்கள் பக்தியுள்ளவர்கள்.*
*அவர்கள் தங்கள் மதத்தில் திருப்தியடைந்தவர்கள்.*

*தேவனை நம்பாதவர்கள் நாத்திகவாதிகள். அவர்கள் தேவன் இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிபட்டவர்களிடம் தேவனை எப்படி அறிமுகபடுத்துவீர்கள்?.*
*அவரிடம் கேட்க வேண்டியது, அவர் உலகம் முழுவதையும் பார்த்திருக்கறிர்களா என்று?*

*அவர் இல்லை என்றால், அப்பொழுது நிச்சயமாக தேவன் இல்லை என்று நீங்கள் கூற மூடியாது என்று சொல்லுங்கள். நீங்கள் ஒரு வேளை தேவன் இல்லை என்று சிந்திக்கலாம். நீங்கள் நாத்திகர் அல்ல, நீங்கள் அறியாமையில் இருக்கிறீர்கள் என்று கூறுங்கள்.*

*அவர் ஆம் என்று கூறினால், அவர் வேறு பிரச்சனையில் உள்ளார், அவரை வேறு விதமாக கையாள வேணடும்.*

*அண்ட சராசரங்களை நம்பவில்லை என்பவர்கள் முட்டாள்கள் என்று ஐன்ஸ்டன் கூறியிருக்கிறார். நீங்கள் எல்லா படைப்புகளையும் கண்டால் தேவன் உண்டு என்று விசுவாசிப்பீர்கள்.*
*எபிரெயர் 11:6* **விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்**

*தேவன் இல்லை என்று நம்புகிறவன் தேவனை காண்பதில்லை. நீங்கள் பிரயாணம் செய்து அடைய போகிற இடம் அல்லது இலக்கு இல்லை என்பீர்கள் என்றால் அவ்விடம் செல்வதற்கு வழியும் இருக்காது.*

**யோவான் 1:18, தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.**

*வேதத்தின் பார்வையில் நாத்திகம் என்பது,*

**சங்கீதம் 14:1-4, தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான். <u>அவர்கள் தங்களைக் கெடுத்து,</u> அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள்; நன்மைசெய்கிறவன் ஒருவனும் இல்லை. *2.* தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார். *3.* <u>எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்;</u> நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. *4.* அக்கிரமக்காரரில் ஒருவனுக்கும் அறிவு இல்லையோ? அப்பத்தைப் பட்சிக்கிறதுபோல, என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே; அவர்கள் கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறதில்லை.**

*அவர்கள் பாவிகள் ஆனபடியினாலும், பாவத்தின் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காகவும் தேவன் இல்லை என்று கூறுகிறார்கள்.*

*நியாயதீர்ப்பின் குற்றத்திர்க்கும் தண்டனைக்கும் பயந்து அவர்கள் தேவனை தள்ளி விடுகிறார்கள்.*

*மதிகேடன் என்பதற்கு எபிரெய மொழியில் ''நாபால்'' என்று அழைப்பார்கள். அதற்கு தீயவன் என்று பொருள். ஒரு மனிதன் தன்னுடைய பாவ வாழ்கையில் வாழ்வதற்காக அவன் கடவுளுக்கு அவனுடைய வாழ்வில் இடம் கொடுப்பதில்லை.*

**சங்கீதம் 10:11-13, தேவன் அதை மறந்தார் என்றும், அவர் தம்முடைய முகத்தை மறைத்து, ஒருக்காலும் அதைக் காணமாட்டார் என்றும், தன் இருதயத்திலே சொல்லிக்கொள்ளுகிறான். *12.* கர்த்தாவே, எழுந்தருளும்; தேவனே, உம்முடைய கையை உயர்த்தும்; ஏழைகளை மறவாதேயும். *13.* துன்மார்க்கன் தேவனை அசட்டைபண்ணி: நீர் கேட்டு விசாரிப்பதில்லை என்று தன் இருதயத்தில் சொல்லிக்கொள்வானேன்.**

*அத்தேனா பட்டணத்தில் வசித்தவர்கள் மூடநம்பிக்கை உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் மத்தியில் நாத்திகர்களும் இருந்தார்கள்.*

*எபிக்கூரியர்கள் தங்கள் வாழ்கையை சந்தோஷமாக களிப்பதே அதிகபட்ச நன்மையாக நம்பினார்கள். அதனால் தேவனை விசுவாசிக்கவில்லை.*

**V 23, எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்.**

*அவர்களிடம் ஆயிரம் தெய்வங்கள் இருந்தது, ஆனாலும் அதன் மத்தியில் உண்மையான தெய்வத்தை அறியாதிருந்தார்கள், அந்த அறியப்படாத தேவனை அறிவிக்க வந்தேன் என்றான்.*

*தேவன் இல்லை என்பவர்கள் அதற்கு சார்பாக இரண்டு காரணங்களை கூறுகிறார்கள்.*
*முதலாவது ''காரணம் மற்றும் விளைவு''.*

*முன்பு ஒரு குளம் இருந்தது, அதில் ஒரு ஆள் இருந்தார். அவர் நாம் இரண்டாக மாறுவோம் என்று சொல்லி இரண்டானார்கள். பின்பு அதே போல மூன்று, நான்காக மாறலாம் என்று மாறினார்கள் என்று பரிணாமவாதிகள் கூறுவார்கள்.*

*சரி நல்லது, முதலாவது அந்த குளம் எப்படி வந்தது, அந்த உயிரினம் எப்படி வந்தது என்று கேட்டால் அதற்கு பதில் அவர்களிடம் இல்லை.*

**எபிரெயர் 3:4, ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன்.**

*உதாரணமாக ஒருவன் உங்களுக்கு அழகிய வீட்டை உங்களுக்கு காண்பிக்கிறான். அந்த வீட்டின் கட்டுமானம் மற்றும் அறைகள் எல்லாவற்றையும் காண்பிக்கிறான், காண்பித்து விட்டு பின்பு கூறுகிறான் இந்த வீடு ஒரு நாள் தீடிரென்று அவன் பார்க்கும் போது உண்டானதென்று.*
*நாம் எவ்வாறு அவனை அழைப்போம்? பைத்தியம் அல்லது முட்டாள் என்று.*

*எந்த காரியமும் உண்டாவதற்கு முதல் காரணம் தேவன். காரணம் இல்லாமல் எந்த காரியமும் உண்டாக்கப்படவில்லை.*

*இரண்டாவதாக கர்த்தர் தந்த ஞானத்தினால் உண்டான வடிவமைப்பு இருக்கிறது.*

*இப்படி உலகம் ஒரு குளத்தில் இருந்து உண்டானது என்று கூறுவது விவாதத்திற்குரியது.*

*எப்படி அறிவு இல்லாத ஒன்றினால் அறிவுள்ளதை உண்டாக்க முடியும்? எப்படி அறநீதி இல்லாத ஒன்று அறநீதி உள்ளதை உண்டாக்க முடியும்.*

*மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?*

*அறம்.*
*அறநீதி*
*சமூகநீதி*
*ஞானம்*
*சிந்திக்கும் ஆற்றல்*

*இந்த காரியங்கள் எப்படி மனிதனுக்கு உண்டானது?*

**சங்கீதம் 94:9-10, காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ? 10. ஜாதிகளை தண்டிக்கிறவர் கடிந்துகொள்ளாரோ? மனுஷனுக்கு அறிவைப் போதிக்கிறவர் அறியாரோ?**

*ஆண்டவர் எல்லாவற்றையும் உண்டாக்கினார்.*

**V 23, எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்**
*பவுலின் பிரயாணத்திற்கு 600 வருடம் முன்பாக அத்தேனா பட்டணத்தில் கொடிய கொள்ளை நோய் உண்டாயிருந்தது என்று வரலாற்றில் கூறப்படுகிறது. அந்த நோயின் நிமித்தம் அநேகர் மரித்து போயினர், எப்படி அதை நிறுத்துவது என்று யாருக்கும் தெரியவில்லை.*

*கிரேத்த தீவில் புலமை பெற்ற கவிஞர் எபிமெண்டிஸ் இந்த கொள்ளை நோயை நிறுத்த ஒரு திட்டம் பண்ணினார். அவர்கள் இந்த நோய்க்கு எந்த தெய்வத்தின் காரணம் அதை எப்படி சமாதானபடுத்துவது என்று ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். ஒரு வேளை அந்த தெய்வத்தை கவனிக்க வேண்டும் என்று விரும்புகிறதோ என்று சிந்தித்தார்கள்.*

*அதனால் எபிமெண்டிஸ் அவர்கள் அரோபேகஸ் மலை மேல் ஏறினார். அங்கே இருந்து கருப்பு மற்றும் வெள்ளை ஆடுகளை அவிழ்த்து விட்டார். எந்த தெய்வம் கோபத்தில் இருக்கிறதோ அந்த தெய்வம் இந்த ஆடுகளை தன் பக்கம் திருப்பி கொள்ளட்டும் என்று திட்டமிட்டார். அதாவது ஆடுகள் பட்டணங்களை சுற்றி எந்த தெய்வங்கள் அருகே படுக்கிறதோ அதன் அருகே இருக்கும் தெய்வத்திற்கும் பலி கொடுப்பதாக திட்டமிட்டனர்.*

*எதிர்ப்பார்த்தபடி எல்லா ஆடுகளும் பட்டணத்தில் இருந்த தெய்வங்களிடத்தில் போகவில்லை. அதனால் எங்கே ஆடுகள் படுத்ததோ அங்கெல்லாம் ஒரு பலிபீடம் கட்டி அறியப்படாத தேவனுக்கு என்று கூறினர். அத்தேனா பட்டணம் முழுவதும் இப்படி அறியப்படாத தேவனுக்கு என்ற பலிபீடங்கள் உண்டு.*

**V 23, எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்.**
*பவுல் அந்த அறியப்படாத தேவனை அறிந்து கொள்ளுங்கள் என்று கூறினார். 600 வருடங்களாக அறியாத தேவனை அறிந்து கொள்ளுங்கள் என்பது வலிமை மிக்க செய்தி. அறியப்படாத தேவனை அறிந்து கொள்ள முடியுமா?*

***கலாத்தியர் 4:8-9, நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது, சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள். 9. இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?***

***1 நாளாகமம் 28:9, என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்.***

***2 தெசலோனிக்கேயர் 1:8, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.***

*ஆம் அவரை யார் என்று அறிந்து கொள்ளமுடியும். ஆனால் எல்லாராலும் அது முடியாது.*
*அந்த மனிதன் தேவனை யார் என்று அறிய வேண்டும். அவரை*
*ஏற்றுகொள்ள வேண்டும்.*
*தேவனே சகலத்தையும் படைத்தவர் என்று பவுல் கூறினார். இவரே அந்த அறியப்படாத தேவன் என்று கூறினார்.*

***V 24, உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை.***

*எபிகூரியர்கள் இந்த அண்டசராசரம் ஏற்கனவே உள்ளது அதை யாரும் உண்டாக்கவில்லை என்று விசுவாசித்தார்கள்.*

*ஸ்தேக்கியர்கள் எல்லாவற்றையும் எல்லாவற்றிலும் தேவன் உண்டென்று கருதினார்கள்.*

*எல்லாவற்றையும் உருவாக்கியது தேவன் என்று பவுல் உரைத்தார்.*

*அப்படி என்றால் பரிணாம வளர்ச்சி என்ற ஒன்றை நீங்கள் விசுவாசிக்கவில்லையா என்றால்? ஆம்! நான் அதை விசுவாசிக்கவில்லை. தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கினார் என்று விசுவாசிக்கிறேன். வேதாகமம் அதை உறுதிப்படுத்துகிறது.*

***சங்கீதம் 146:5-6, யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான். 6. அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினவர்; அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர்.***

*ஏசாயா ஆண்டவருடைய படைப்பின் மகத்துவத்தை தம்முடைய வசனத்தில் விவரித்திருக்கிறார்.*

***ஏசாயா* 40:12, *தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளந்து, வானங்களை ஜாணளவாய்ப் பிரமாணித்து, பூமியின் மண்ணை மரக்காலில் அடக்கி, பர்வதங்களைத் துலாக்கோலாலும், மலைகளைத் தராசாலும் நிறுத்தவர் யார்?***

***ஏசாயா* 40:28, *பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது.***

*யார் எல்லாவற்றையும் உண்டாக்கினார்?*
*தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கினார்.*

***ஏசாயா* 45:18, *வானங்களைச் சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச்செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை.***

*தேவன் சிருஷ்டிப்பின் தேவன், அவராலே சகலமும் படைக்கப்பட்டது.*

***சகரியா* 12:1, *இஸ்ரவேலைக்குறித்துக் கர்த்தர் சொன்ன வார்த்தையின் பாரம்; வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, மனுஷனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்குகிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:***

*தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார், மனிதனையும் சிருஷ்டித்தார்.*

***எரேமியா* 10:10-11, *கர்த்தரோ மெய்யான தெய்வம்; அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா; அவருடைய கோபத்தினால் பூமி அதிரும்; அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள். 11. வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள், பூமியிலும் இந்த வானத்தின்கீழும் இராதபடிக்கு அழிந்துபோகும் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள்.***

*சாத்தான் தான் இந்த உலகத்தை படைத்தான் என்று சொந்தம் கொண்டாடுகிறான் என்று உங்களுக்கு தெரியுமா?*

*அது தான் பொய்யான தெய்வம், இந்த உலகை படைத்ததாக சொந்தம் கொண்டாடுகிறது.*

***எரேமியா* 10:12, *அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினால் விரித்தார்.***

*இது பரிணாம வளர்ச்சியால் உருவாக்கப்படவில்லை. தேவனால் உண்டாக்கப்பட்டது.*

*தேவன் தவிர வேறு ஒருவரும் இதில் இல்லை. தேவனை தவிர வேறே எந்த தெய்வமும் படைப்பாளி இல்லை.*

***எரேமியா* in 32:17, *ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகாபலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்; உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை.***

*வுஇல்லை நாம் பரிணாம வளர்ச்சியை நம்புகிறவர்கள் அல்ல. நாம் தேவனால் அகிலம் உண்டானதென்று நம்புகிறோம்.*

*பரிணாமவாதிகள் எதில் நம்பிக்கையாயிருக்கிறார்கள்?*
*அவர்கள் நம்புவது.*

1. *இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இல்லை.*
2. *எல்லாம் சந்தர்ப்ப சூழலால் உண்டானது.*
3. *உயிரினம் திடிரென்று உருவானது.*
4. *ஞானம், மனசாட்சி மற்றும் சமூக நீதி தானாகவே தோன்றியது.*

*தேவன் யார் என்று சந்தியுங்கள்? அவர் நம்மை படைத்தவர், என்று பவுல் கூறுகிறார்.*

*இரண்டாவதாக தேவன் வானம் மற்றும் பூமிளை ஆள்பவர்.*
**ஆதியாகமம் 14:19-20, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக. 20. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்.**

*அவர் அதை படைத்தவர் மட்டுமல்ல அதை ஆளுகிறவருமாய் இருக்கிறார்.*

***சங்கீதம்* 24:1, பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.**
**வெளிப்படுத்தின விசேஷம் 20:11, பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை.**

**V 24, உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை.**

*நீங்கள் தேவனை கட்டிடத்திற்குள் அடக்கி வைக்க முடியாது.*

*அத்தேனா பட்டணத்தினர் என்ன செய்கிறார்கள்?*

*தேவனை ஒரு சிறிய பெட்டிக்குள்ளாக, கட்டிடத்திற்குள்ளாக, கோவிலுக்குள்ளாக அடக்க நினைக்கிறார்கள்.*

*தேவன் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர். அவரை இதற்குள்ளாக அடக்க முடியாது.*

*எது தேவனை ஒரு வரையறுக்குள் கொண்ட வர நினைத்தால் அது தேவனுடைய மகிமையை குறைக்கின்றது.*

*ஒரு சிலையை வணங்குவது மாத்திரம் விக்கிரக ஆராதனை அல்ல, உண்மையான தெய்வத்திற்கு எதிராக செய்வதும் விக்கிரக ஆராதனை. நீங்கள் அப்படி செய்தால் உண்மை தெய்வத்தை கலங்கபடுத்தி கரைப்படுத்துகிறீர்கள்.*

**1 இராஜாக்கள் 8:27**, **தேவன் மெய்யாக பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?**

*சாலமோன் தான் கட்டின ஆலயத்தில் தேவனை அடக்க முடியாது. அவருடைய மகிமை, பிரசன்னம் இவைகளுக்கு அப்பாற்பட்டது என்கிறார்.*

**சங்கீதம் 139:1-12**, **கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். 2. என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். 3. நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். 4. என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். 5. முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். 6. இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது. 7. உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? 8. நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். 9. நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், 10. அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். 11. இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். 12. உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.**

*தேவனை எந்த உருவத்திற்குள்ளும் அடக்க வேண்டாம்.*
*தேவன் கைகளினால் கட்டப்பட்ட கட்டிடத்திலோ, ஆலயங்களிலோ இல்லை.*
*தேவனை சந்தியுங்கள்: அவர் சிருஷ்டிகர், ஆளுபவர்.*

*ஒருவனும் இயேசுவை தவிர வேறு வழியில் பிதாவினடத்திற்கு வர முடியாது.*

*நீங்கள் உண்மையான தெய்வம் யார் என்று தெரிந்து கொண்டீர்கள், அவரை கிட்டி சேர்வதன் மூலம் இன்னும் அதிகமாக நீங்கள் அவரை அறிய முடியும்.*

*நீங்கள் இதுவரை இந்த உண்மையான தேவனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், இன்று ஏற்று கொள்வீர்களா?.*